// TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in

**முன்னிலை: திரு.ஆ.தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண்.7 /2017**

திரு. P. அருண்குமார்,
எண்.463A, V.V.C. நகர் 2வது தெரு,
விழுப்புரம் 605 602. . . . . மேல் முறையீட்டாளர்

எதிர்

செயற் பொறியாளர் / இ&ப,
விழுப்புரம்,
விழுப்புரம் மின்பகிர்மான வட்டம் ,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பழைய பவர் ஹவுஸ் ரோடு,
விழுப்புரம்–605 602. . . . . . எதிர்மனுதாரர்

**ஆணை நாள்: 16.3.2017**

1. திரு. பி.அருண்குமார், விழுப்புரம், அவர்களின் 11.1.2017 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.7/2017 ஆக பதிவு செய்யப்பட்டது.

2. மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பு எண்.406–002–2964–ல் உள்ள மீட்டர் எரிந்து விட்டதால் அதற்கான கட்டணம் செலுத்தப்பட்டு புதிய மீட்டர் பொருத்தப்பட்டது. மீட்டர் எரிந்து விட்டதற்காக வசூல் செய்யப்பட்ட தொகை ரூ.1718/– ஐ திரும்ப வழங்கும்படி கோரியுள்ளார்.

3. மேற்கண்ட மேல்முறையீட்டு மனுவின் நகல் எதிர்மனுதாரர்களுக்கு இசைவிணக்கம் எதுவும் ஏற்படவில்லை எனில் பதிலுரையை சமர்ப்பிக்க வேண்டும் என்று 19.1.2017 நாளிட்ட மின்குறைதீர்ப்பாளரின் அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்பட்டது.

4. மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 31.3.2017 அன்று கேட்புரை நடத்தப்படும் என்று அறிவிக்கை செய்யப்பட்டது.

5. இதற்கிடையே எதிர் மனுதாரரான செயற்பொறியாளர் / விழுப்புரம் அவர்கள் தன்னுடைய 15.02.2017 நாளிட்ட கடிதத்தில் மேல்முறையீட்டு மனு எண்.7/2017–ன் மேல்முறையீட்டாளரான திரு.அருண்குமார் அவர்கள் தன்னுடைய மேல்முறையீட்டு மனுவை திரும்ப பெற்றுக் கொண்டதாக கடிதம் அளித்துள்ளதாக தெரிவித்து 10.02.2017 நாளிட்ட அதன் நகலையும் இணைத்துள்ளார். மேல்முறையீட்டாளரின் கடிதத்தின் சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*“மேற்கண்ட பார்வையின் மூலம் எனது மின்னிணைப்பு எண்.406–002–2964 உள்ள மீட்டர் எரிந்து போனதால் அதற்கான தொகை ரூ.1718/– செலுத்தி விட்டேன். மேற்படி தொகையை திரும்ப பெறக்கோரி மின் குறை தீர்ப்பாளரிடம் மேல் முறையீடு தாக்கல் செய்தேன்.*

*தற்சமயம் நான் மேல் முறையீடு தாக்கல் செய்த என்னுடைய மனுவினை இதன் மூலம் திரும்ப பெற்றுக் கொள்கிறேன் என்பதை பணிவுடன் தங்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.”*

6. மேல்முறையீட்டாளர், தனது 10.2.2017 நாளிட்ட கடிதத்தில் தன்னுடைய மேல்முறையீட்டு மனுவை திரும்ப பெற்றுக்கொள்வதாக தெரிவித்துள்ளதால் மேல்முறையீட்டு மனு எண்.7/2017 தள்ளுபடி செய்யப்படுகிறது என்று தீர்வு செய்யப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்

1) திரு. P. அருண்குமார்,
எண்.463A, V.V.C. நகர் 2வது தெரு,
விழுப்புரம் 605 602.

2) செயற் பொறியாளர் / இ&ப,
விழுப்புரம்,
விழுப்புரம் மின்பகிர்மான வட்டம் ,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பழைய பவர் ஹவுஸ் ரோடு,
விழுப்புரம்–605 602.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
விழுப்புரம் மின்பகிர்மான வட்டம் ,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பழைய பவர் ஹவுஸ் ரோடு,
விழுப்புரம்–605 602.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – **மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.